**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.343/2018**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சண்முகராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **சின்னச்சாமி** | **Calling** | : | **சொந்த தொழில்** |
| **Village** | : | **உடுமலைப்பேட்டை** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **38** |
| | | | **Dated** | : | **25.06.2025** |

**25.06.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 **திரு.சண்முகராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

1, 2 **எதிரிகள் ஆஜர் இல்லை. 355 BNSS Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது உடுமலைப்பேட்டையில் குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் அகிலாண்டீஸ்வரி என்பவரை எனக்குத் தெரியும். எதிரிகளையும் எனக்குத் தெரியும். 1957– 1967 காலகட்டத்தில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த (லேட்) திரு.பொன்னையா சர்வே எண். 618, பட்டா எண். 308 ல் 1 ஏக்கர் 63 செண்ட் நிலம் கிரையம் பெற்ற சொத்தாகும். அவருக்கு வாரிசுகளாக 9 நபர்கள் இருந்தார்கள். அதில் ஆண் வாரிசு 6 நபர்களும், பெண் வாரிசுகள் 3 பேர்களும் ஆவார்கள். அவரது வாரிசுகளில் ஒருவரான சரஸ்வதி அவர்களிடமிருந்து நானும், உடுமலைப்பேட்டையில் வசிக்கும் வெங்கடேஷ்பாபு மற்றும் தனபால்

ஆகியோர்கள் சேர்ந்து 22.07.2008ம் தேதி பழனி மாவட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து சரஸ்வதியம்மாளுக்குப் பாத்தியப்பட்ட 1/9 பங்குள்ள சொத்தான 21 சென்டை நாங்கள் 3 நபர்களும் கிரையமாக பெற்று பதிவு செய்தோம். அந்த ஆவண எண். 1545/2008 ஆகும்.

மேற்படி கிரையம் பெற்ற சொத்தை நாங்கள் மூவரும் அனுபவித்து வந்தோம். ஆவண எண். 1545/2008ன் மூலம் கிரையம் பெற்ற 3 நபர்களில் வெங்கடேஷ்பாபு மற்றும் தனபால் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற 3ல் 2 பங்கை எனக்கு 07.12.2012ம் தேதி பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கிரையமாக பதிவு செய்து கொடுத்தார்கள். அந்த ஆவண எண். 1334/2012 ஆகும். மேற்படி சொத்தை நான் முழுமையாக அனுபவித்து வந்தேன். மேற்படி லேட். பொன்னையா அவர்களின் வாரிசுகளில் ஒருவரான பரமேஸ்வரி க/பெ.சக்திவேல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட 1/9 பங்கு சொத்தையும், மற்றொரு வாரிசான அகிலாண்டீஸ்வரி அவர்களுக்கு பாத்தியப்பட்ட 1/9 பங்கு சொத்தையும், சரஸ்வதியம்மாளிடமிருந்து நான் கிரையம் பெற்ற 21 செண்டு சொத்தையும் சேர்த்து அவரது மருமகனான 2ம் எதிரி பிரேம்குமாருக்கு பழனி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் வைத்து 02.01.2014ம் தேதி கிரையமாக பதிந்து கொடுத்துள்ளார். அந்த ஆவண எண். 5/2014 ஆகும்.

எனக்கு கிரையம் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்தான 21 சென்டை விற்பதற்கு என்னிடம் பரமேஸ்வரி எந்த அனுமதியும் ஆவணமும் பெறவில்லை. அகிலாண்டீஸ்வரி என்பவரிடமும் எந்தவிதமான ஒப்புதலும், ஆவணமும், கையொப்பமும் பெறவில்லை. மேற்படி 02.01.2014ம் தேதி கிரையம் செய்த விபரம் தெரிந்து 2 எதிரிகளிடமும் மோசடியாக பதிவு செய்த விபரத்தை நானும், அகிலாண்டீஸ்வரி மற்றும் அகிலாண்டீஸ்வரி மூத்தமகள் லோகநாயகி ஆகியோரிடம் சென்று கேட்டோம். அதற்கு அவர்கள் எங்களிடம் இதை ஒன்றும் செய்யமுடியாது. வேண்டுமென்றால் நீதிமன்றம் போங்கள். இதைப்பற்றி கேட்டால் எங்களை அடித்து விடுவதாக மிரட்டினார்கள். அதனால் நானும், அகிலாண்டீஸ்வரியும் திண்டுக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் 30.07.2014ம் தேதி நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தோம்.

அகிலாண்டீஸ்வரி இறந்துவிட்டார். அகிலாண்டீஸ்வரியின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் அகிலாண்டீஸ்வரியின் கையொப்பமாகும். (**புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இது சம்மந்தமாக போலீசார் என்னை 25.03.2015ம் தேதி என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.06.26 16:54:41 +0530

Judicial Magistrate No.II
Dindigul.